1971 ஜூலை 26]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது நடைபெறுகின்ற தமிழரசு ஏடு நல்ல முறையில், அதிகப் பிரதிகள் விற்பனையாகி, மக்களிடம் இருக்கிறது. மேலும் வளர்ச்சி பெற்று இருக்கும் நிலை ஏற்பட்டால், அப்பொழுது மாண்புமிகு உறுப்பினருடைய யோசனைகளையும் பரிசீலிக்கலாம்.

Demonstration by workers of Simpson Group of Companies.

*139. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there was strike and demonstration by the workers of the Simpson Group of Companies in Madras City during the middle of April 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (ஆ): பேரவையின் முன் இது பற்றிய குறிப்பு @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்தக் கம்பெனியோடு தொடர்பு இல்லாதவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆர்பாட்டங்கள் நடக்கும் போது தொடர்பு இல்லாதவர்கள் சேர்ந்து கொள்வது இயற்கையே.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், சிம்சன் க்ரூப், அடிசன் கம்பெனி போன்றவைகளில் இரு பகுதித் தொழிலாளர்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டாலும், இன்றைக்குச் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், இருசாரார்கள் பேரிலும் போடப்பட்ட கேஸ்கள் வாபஸ் வாங்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வழக்கின் தன்மைகள் ஆராயப் பட்டு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

DR. H. V. HANDE: After going through the statement, is it not a fact that there are several other factors also, whether number of clashes had taken place, whether number of complaints had been received from Mr. Gurumurthy's union and also whether several of them were admitted in E.S.I. hospital? May I know whether complaints had been received from a particular another union affiliated to INTUC (a copy of the memorandum of which I had given to the Hon. Minister for Labour)? May I know whether the Hon. Chief Minister will give an assurance or categorical answer that future clashes at least will be prevented and that suitable action will be taken on those who have involved themselves in these clashes, irrespective of party affiliations?

@ 123–124-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதுவரை முறையாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்போல் இனியும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த குறிப்பில் "தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தொழிலாளர் பிரிவினர் சிலர் சட்டத்திற்குப் புறம்பான முறையில் ஒரு கூட்டமாகக் கூடி பம்பிங் ஸ்டேஷன் சாலையில் தி.மு.க. தொழிற்சங்கத் தொழிலாளர்களைத் தாக்கினர்" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும்போது இப்படித் தி.மு.க.வினர் தாக்கப்படுகிறார்களே, இதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருப்பதுதான் காரணம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த சிம்சன் க்ரூப்பில் தகராறு உண்டானதற்குக் காரணம் அங்கே திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியாக ஒரு சங்கம் அமைத்திருப்பதுதான் என்று சொல்கிறார்களே, அது உண்மைதானா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினரைப் பொறுத்தவரை உண்மையாக இருக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த சிம்சன் க்ரூப் யூனியன் சம்பந்தமாக சீக்ரெட் பாலட் முறையைக் கையாள்வதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது எல்லாக் கட்சி யூனியன்களும் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவாகும். அரசு ஒரு தனி நிறுவனத்திற்கு முடிவு எடுப்பது என்பது பொருத்தமாக இருக்காது.

திரு. கே. என். குமாரசாமி: இந்த ஆர்ப்பாட்டம் கோரிக்கைகளுக்காக நடைபெற்றதா? அல்லது இரண்டு போட்டிச் சங்கங்களிடையே ஏற்பட்டதா? போட்டிச் சங்கங்களைத் தவிர்க்க அரசாங்கம் உருவான நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: போட்டிகளைத் தவிர்ப்பதற்கு பொதுவான கொள்கைகள் வகுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆனால் அடிப்படையில் ஏற்படக்கூடிய ஆர்ப்பாட்டங்கள் என்கிறபோது சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காக்கும் அடிப்படையில் காவல்துறையினர் வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

DR. H. V. HANDE: Whoever gets involved in this particular trade union rivalry, the ultimate persons who are going to suffer are the poor workers and the Government, as I understand, is interested in preventing such things from happening. May I know whether the Hon. Chief Minister would give a categorical answer that he would be prepared to appoint a sort of Commission of

1971 ஜூலை 26]

Enquiry, an Expert Commission so that the discontentment among Congress Workers and persons involved in trade union rivalry, will be considerably relieved? One section of the House says that there is discontentment among Congress Workers and another section of the House says that there is discontentment among D.M.K. workers. So will the Hon. Chief Minister come forward to appoint a Court of Enquiry or Commission of Enquiry to investigate into the whole matter and give satisfaction to the public as well as to the workers ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரண்டு கருத்துக்கள் சொல்லப்படுகிற காரணத்தினாலேயே ஒரு விசாரணை வைக்கப்பட வேண்டுமென்று சொல்ல முடியாது, ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் தன்மையை உணர்ந்து இதுபோன்ற விசாரணை அமைக்கப்பட வேண்டும்.

திரு. ரா. ரா. முனுசாமி: சென்னையிலே பல தொழிற்சாலை களில் நடைபெறுகிற ஆர்ப்பாட்டங்களுக்கு அரசியல் கட்சிகளின் தலையீடுதான் என்பதாக பொதுமக்களிடையே பிரச்சாரம் நடை பெறுகிறதே, இதுபோல அரசியல் கட்சிகள் தலையிடாதிருக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதில் அரசியல் கட்சிகள் தலையிடுகின்றன என்பதற்காகக் கடுமையான நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்காது. ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல சட்டத்திற்கும், ஒழுங்குக்கும், அமைதிக்கும் பங்கம் ஏற்படக்கூடிய வகையில் செயல்முறைகள் இருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் இந்தி வகுப்புக்கள்

*440 வினா—திரு. துரைமுருகன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எல்லாப் பள்ளிகளிலும் இந்தியை அறவே நீக்கி விட்ட பிறகும், வேலூரில் உள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிலும் டி.எஸ்.பி.களுக்கு இந்தி வகுப்பு நடத்தப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

Assignment of land to landless in Pallipet Sub-Taluk.

*451. Q.—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that an assignment of land in S. No. 12/1 of G.C.S. Kandigai in Pallipet Sub-Taluk, Chingleput District for 18 landless poor people has been made; and

(b) if so, wheher it is being cultivated by the persons to whom it was assigned?